Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 19 | 02-06-2003 | திங்கட்கிழமை | ஓசை 104

FUJIFILM

வன்னி மண்ணில் ஓர் புதிய உதயம்

பொற்காலம்

04.06.2003 இல் இருந்து வர்ணக் கலையகம்

வன்னி மக்களின் தேவைக்காக கணனி முறையில் 30நிமிடத்தில் புகைப்படச் சுருள் பிரதியாக்கல் (படங் கழுவுதல்)

(சி-7889)

Studio / Video & Audio

Jaffna Road, Killinochchi

## அரசின் ஆலோசனைகள் நிராகரிப்பை அடுத்து

# இரண்டு நாட்கள் தீவிர ஆலோசனையின் பின் புலிகளுக்கு பிரதமர் மீண்டும் கடிதம்!

## அரசியல் ஆலோசகருக்கு அனுப்பப்பட்டது

**விடுதலைப்புலிகள் கோரியிருந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்குப் பதிலாக அரசாங்கம் அனுப்பிய பிரேரணைகளை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளதைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் சிரேஷ்ட அமைச்சர்கள், அதிகாரிகளுடன் தீவிர ஆலோசனைகளை நடத்திய பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுக்குப் பதில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். நேற்றுமாலை புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு இக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.**

இடைக்கால நிர்வாக சபை குறித்த விடுதலைப்புலிகளின் கோரிக்கை குறித்து சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், திலக்மாரப்பன, ஜோண் அமரதுங்க மற்றும் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேணாட் குணதிலக ஆகியோருடன் நேற்று முன்தினம் மாலை பேச்சுக்களை நடத்தியதுடன் நேற்று ஜப்பானுக்கு விஜயம் செய்த மிலிந்த மொறகொடவுடனும் ஆராய்ந்துள்ளார். இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## தொலைத்தொடர்புக் கோபுர

# உபகரணங்கள் எடுத்துவர பாது.அமைச்சு அனுமதிமறுப்பு

(கொழும்பு)

கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள தொலைத் தொடர்புக் கோபுரத்துக்குரிய உபகரணங்களை எடுத்துவர சிறிலங்காப் படைத்துறை அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

கிளிநொச்சியில் அமையவுள்ள நூறுஅடி உயரமான தொலைத் தொடர்புக் கோபுரத்துக்கும் பரந்தனில் அமையவுள்ள 80 அடி உயரமான கோபுரத்துக்கும் உரிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கொழும்பில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தஉபகரணங்களை வன்னிக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதியினை வழங்கக்கோரி தொலைததொடர்பு நிறுவனம் படைத்துறை அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பூநொச்சிமுனை சந்தியில் நேற்று இரவு 8.15 மணியளவில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர்அணி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் காளிராசா ரமணன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் அணி உறுப்பினரான இவர் கடந்த பொதுத்

(10ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையீனமே சமாதான முயற்சிகளில் தென்படும் சிக்கல்களுக்குக் காரணம்!

## பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் டேவிட் ஏர்வின்

(கொழும்பு)

ஒருவருக்கொருவரிடையே நிலவுகின்ற நம்பிக்கையீனமே சமாதான நடவடிக்கையில் ஆரம்பத்தில் ஏற்படும் சிக்கல் என்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் டேவிட் எர்வின் தெரிவித்துள்ளார்.

வட அயர்லாந்தின் ஐ.ஆர்.ஏ போராளி இயக்கத்துக்கும், பிரிட்டன் அரசுக்கும் இடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின் போது இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் விசுவாசத்தை வெளிக்காட்ட தவறியதால் சிக்கல்கள் தலைதூக்கியதை அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் சமர்தான முயற்சிகளில் ஒருவர் மீது மற்றவருக்கு இருந்த நம்பிக்கை தொடர்பில் எந்தவித சந்தேகமும் இருக்க வில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்பாடு செய்திருந்த இலங்கையின் சமாதான

(10ஆம் பக்கம் பார்க்க)



# கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் மறியல் நடாத்த மக்கள் முடிவு

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு கோரி யுத்த நிறுத்தக் கண்காணிப் புக் குழு அலுவலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தவுள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் பிரதிநிதிகள் கடந்த வெள்ளியன்று சுன்னாகத்தில் கூடி இந்த முடிவை மேற்கொண்டனர்.

# பெண்கள் தொடர்பான ஏழு தீர்மானங்கள் மகளிர் சங்கம நிகழ்வில் நிறைவேற்றம்

(மன்னார்)

மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றன. இதன் போது பெண்கள் தொடர்பான ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் கிராமந்தோறும் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக இனங்கண்டு சம்பந்தப்பட்டவர்களை தொடர்பு கொண்டு பெண்களின் மேம்பாட்டிற்கு உதவ வேண்டும்.

முக்கியமாக விதவைகளை இனங்கண்டு பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை இனங்கண்டு உதவ வேண்டும். மற்றும் கணவர் இருக்கின்ற பட்சத்தில் அவர்களால் உழைக்கமுடியாது கஷடப்படும் குடும்கங்களை இனங் கண்டு உதவ முன்வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இலை மறை காயாக

(10ஆம் பக்கம் பார்க்க)

# டோக்கியோ மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்

(கொழும்பு)

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும்மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும் என்று சிறிலங்காவிற்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி தெரிவித்துள்ளார். கொழும்பில் இருந்து வெளிவரும் செய்தித்தாள் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள விசேட பேட்டியிலேயே இந்த விடயத்தை அவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருத்தம்

கடந்த வெள்ளியன்று ஈழநாதம் நாளேட்டின் (i) ஆம் பக்கத்தில் வெளிவந்த "வீரவணக்கம்" என்னும் தலைப்பிலான செய்தியில், சாவடைந்த போராளியின் பெயர் கப்டன் தூய தம்பி என்பது தவறானதாகும். கப்டன் தூயநம்பி என்பதே சரியானதாகும்

# மூன்று ஐரோப்பிய நாட்டுத் தூதுவர்கள் கிளிநொச்சிக்கு நாளை மறுதினம் விஜயம்!

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவர்

(கிளிநொச்சி)

பிரிட்டன், சுவிஸ்லாந்து, நெதர்லாந்து ஆகிய மூன்று ஐரோப்பிய நாட்டுத் தூதுவர்கள் நாளை மறுதினம் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளனர். இவர்கள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

டோக்கியோ உதவி வழங்குவோர் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவது கேள்விக்குள்ளாகிய நிலையில் இவர்களின் வன்னி வருகையானது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதப்படுகின்றது. ஜீன் 04 ஆம் திகதி காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் நெதர்லாந்துத் தூறதுவர் திருமதி.சுசான் பிளாங்கற், சுவிற்சலாந்துத் தூதுவர் பேணடினோ றெகஷொனி மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஸ்ரீபன் இவான்ஸ் ஆகியோர் அங்கிருந்து தரை வழியூடாக கிளிநொச்சியை வந்தடைவர் எனத் தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்து இவர்கள் முற்பகல் 11.00 மணியளவில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். இதன் பின்னர், அன்று பிற்பகலே அவர்கள் யாழ். திரும்பி அங்கிருந்து விமானம் மூலம் கொழும்பிற்குப் பயணமாக

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

சனநெரிசல் நிறைந்த முறிகண்டிப் பகுதியில் முதியவர் ஒருவர் நேற்று மதியம் 12 மணியளவில் வாகன விபத்தில் சிக்கியுள்ளார்.

முறிகண்டி ஆலய வளாகத்தை அண்டிய பகுதியிலேயே இச்சம்ப

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**அறிவுடைமை கல்வி நிலையம், கிளிநொச்சி.**

2004, 2005ற்கான PHYSICS - செந்தில்குமரன் B.Sc. CHEMISTRY-சரவணபவான் B. Sc. 02.06.2003 திங்கள் (இன்று)பி.ப 4.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. மேலதிக விபரங்களுக்கு : நிர்வாகி. (3296)

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பனை, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

**தவறிவிட்டது**

முருகையா தங்கவேல் ஆகிய எனது அடையாள அட்டை (551702693x) புதுக்குடியிருப்புக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையிலோ அல்லது சீமாட்டி தையலகத்திலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3298)

# உலக சூழல் தினத்தை முன்னிட்டு கிளி.யில் சிரமதானப் பணிகள்

(அலுவலக செய்தியாளர்)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தூயவன் அரசறிவியல் கல்லூரிப் போராளிகளால் நேற்று மருதநகர் வீதி துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஏராளமான போராளிகள் கலந்து கொண்டனர்.

அத்துடன் கிளிநொச்சி உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் ஒழுங்கமைப்பில் உதயநகர் மக்களின் ஒத்துழைப்புடன் கிளிநொச்சியில் முன்னர் வைத்தியசாலை அமைந்திருந்த வளாகம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இப்பணியில் 50க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி சூழல் தினத்தை முன்னிட்டு செயற்படுத்தப்பட்டுவரும் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் போராளிகள், பொதுமக்கள் என பல்வேறுபட்ட தரப்பினரும் இணைந்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# ஏ-9 வீதி விபத்தில் ஒருவர் காயமடைந்தார்


(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 பிரதான வீதியில் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அண்மையில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் மேற்படி வீதியால் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பல்கலைக்கழக மாணவர்களுடன் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து, முன்னே சென்ற பாரவூர்தியை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. இவ்வாறு பேருந்து முந்துவதை எதிர்பாராத மோட்டார் சைக்கிள் சாரதி தனது மோட்டார் சைக்கிளை எதிரே வந்த பாரவூர்தியுடன் மோதியுள்ளார். பாரவூர்தி சாரதி சாதுரியமாகத் தனது வாகனத்தை நிறுத்தியமையால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயங்களுடன் தப்பிக் கொண்டார். (லோ)

# மேதகு வ.தியோகுப்பிள்ளை இரங்கற் திருப்பலி நாளை

மகுடத்து மாணிக்கம் மறைந்த ஆயர் - மேதகு.வ.தியோகுப்பிள்ளை அவர்களின் துயரச் செய்தியில் மூழ்கிய அனைத்து உள்ளங்களும் அவரின் சேவைகளையும், ஆன்மீகத் தொண்டின் வளர்ச்சியையும், அன்பையும் அகிலம் வியக்க வைக்கவும், ஆன்மீக சமாதானம் வேண்டி தமிழினத்தினை வளம் கொழிக்க வைத்து சேவைகள் பல புரிந்த இவருக்கு வன்னி மாவட்ட அனைத்துக் குருக்களும், அமல மரித்தியாகிகள், அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், பொதுநிலையினர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியினை புனித பற்றிமா அன்னை ஆலயம், உருத்திரபுரத்தில் நாளை செவ்வாய்க்கிழமை, காலை 6.30 மணிக்கு வன்னி, மாவட்ட குருமுதல்வர் அருட்திரு. தேவசகாயம் அடிகளாரின் தலைமையில் நடாத்தவுள்ளனர் என்பதை அருட்திரு.ம.ம.ஞானேந்திரன், உருத்திரபுரம் பங்குத்தந்தை தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் மகாபொல புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள். இவர்களுக்கான புலமைப்பரிசில்கள் நேற்று முன்தினம் மட்டு. அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டது.

# ரஞ்சித்தின் கொலைக்கும் எனக்கும் தொடர்பில்லை

## பிரதி அமைச்சர் சஜித் பிரேமதாச

தென்மாகாண அமைச்சர் எம்.கே. ரஞ்சித்தின் (சண்டிமல்லி) கொலைக்கும் தனக்கும் எதுவித தொடர்புமில்லை என சிறிலங்காவின் பிரதி சுகாதார அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட பொது சன ஐக்கிய முன்னணியினர் ரஞ்சித்தின் கொலை "ஒரு அரசியல் படுகொலை" என வர்ணித்துள்ள அதே வேளை, இக் கொலைக்குக் காரணமாக சஜித் பிரேமதாசவை சுட்டிக் காட்டிவருகின்றனர்.

இதனை மறுத்துள்ள சஜித் பிரேமதாச, தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டு பொது சன ஐக்கிய முன்னணித் தலைவர்கள் இக்குற்றச்சாட்டை முன்வைப்பதாகத் தெரிவித்துள்ளார் "எனது கைகள் சுத்தமானவை. எனக்கும் பாதாள உலகத்தவருக்கும், குற்றவாளிகளுக்கும் இடையில் எதுவித தொடர்புமில்லை" என தெரிவித்துள்ளார்.

முன்னாள் சனாதிபதி பிரேமதாசவின் மகனான சஜித் பிரேமதாச அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் அம்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாகாணசபை அமைச்சர் ரஞ்சித் மரணத்திற்குத் துக்கந் தெரிவித்து சில இடங்களில் கட்டப்பட்டிருந்த அலங்காரங்கள் அறுத்தெறியப்பட்டமை தொடர்பாகவும் சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்கள் மீது குற்றஞ் சுமத்தப்படுகிறது. ஆனால் இதனை ரஞ்சித்தால் பாதிக்கப்பட்டவர்களே அறுத்தெறிந்ததாகப் பொலிசார் கூறுகின்றனர்.

அத்துடன் இது அரசியல் படுகொலை என்பதற்கான ஆதாரமெதுவும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் பொலிசார் கூறுகின்றனர்.

# தமிழ்க் கூட்டமைப்பினர் நாளை சிறிலங்காப் பிரதமரைச் சந்திப்பர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளை சிறிலங்காப் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பின் போது தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஆராய்வதுடன் ஜப்பான் மாநாட்டுக்கு முன்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபைக்கு நிகரான அதே அளவு அதிகாரங்களைக் கொண்ட நிதிநிர்வாகக் கட்டமைப்பையும் ஏற்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமரை வலியுறுத்த இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கு சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்து வேண்டுகோள் விடுக்கவுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் மாநாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் மாநாடு நேற்று ஆரம்பமாகி 3-ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட விவசாய சம்மேளனத்தின் ஆதரவில் இம்மாநாடு நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள் பற்றி ஆராயப்படவுள்ளதுடன் விவசாயத்துறைசார் நிபுணர்கள், பரப்புரையாளர்கள், விவசாயத் திணைக்கள அலுவலர்களின் உரைகளும் இடம்பெறவுள்ளன.


## முல்லைத்தீவு நகரத்தில் நிழற்படப்பிரதி சேவை

முல்லைத்தீவு நகரில் கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தினால் 02.06.2003 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தரமான நிழற்படப்பிரதி செய்து கொடுக்கப்படும் என்பதனை சகல பாவனையாளர்கட்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,
முல்லைத்தீவு.

(சி-7887)

## குடும்பப் பதிவு அட்டை உடன் பெற்றுக்கொள்க

போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் குடும்பப்பதிவு அட்டை தேவைப்படுவதனால் இதுவரைகாலமும் குடும்பப்பதிவு அட்டை பெற்றுக்கொள்ளாதோரும், சரியான தரவுகளுடன் குடும்பப்பதிவு அட்டை வைத்திருக்காதோரும் உடன் தங்கள் பிரதேசங்களில் உள்ள குடும்பப்பதிவு அட்டைச் செயலகங்களுடன் தொடர்பு கொண்டு குடும்பப்பதிவு அட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்பப் பதிவு அட்டைப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

(3299)

## தமிழீழ சட்டக்கல்லூரி - நீதி நிர்வாகத்துறை

## உள்வாரி சட்டக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல் - 2003

தமிழீழ சட்டக்கல்லூரியில் உள்வாரியாக கல்வி பயிலுவதற்கான ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் சட்டக்கற்கை நெறிக்கு தகுதியும் ஆர்வமும் உடையவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்.**

01. குறைந்தது க.பொ.த.(உ/த) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் க.பொ.த (சா/த) தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தலும் வேண்டும்.

02. விண்ணப்ப முடிவுத்திகதி : 2003-07-01
விண்ணப்பங்களை தமிழீழ மாவட்ட நீதிமன்றம் (முல்லைத்தீவு, மல்லாவி, கிளிநொச்சி, ஜெயபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை) ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை அதிபர், தமிழீழ சட்டக்கல்லூரி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 2003-07-01 ஆம் நாளுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும் தபால் உறையின் இடதுபுற மேல் மூலையில் "உள்வாரி சட்டக்கற்கை நெறி விண்ணப்பம்" எனவும் தவறாது குறிப்பிடவும்.

03. மேற்குறிப்பிட்ட தகுதியுடையவர்களுக்கு 2003-08-10 ஆம் நாள் உள்வாங்குவதற்கான போட்டிப்பரீட்சை தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சியில் நடைபெறும்.

குறிப்பு:- இப்போட்டிப் பரீட்சைக்கான மேலதிக விபரங்களை தமிழீழ சட்டக்கல்லூரி கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,
தமிழீழ சட்டக்கல்லூரி,
நீதி நிர்வாகத்துறை,
தமிழீழம்.

(சி-7886)

# சிங்கப்பூரில் 'சார்ஸ்' நோய் அகன்றது; மக்கள் பெரு மகிழ்ச்சியில் திளைப்பு!

**சிங்கப்பூரில் சார்ஸ் நோய் முற்றிலுமாகக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப் பட்டதையடுத்து சிங்கப்பூர் மக்கள் அதனை மகிழ்ச்சியாகக் கொண்டாடியுள்ளனர். நாடு பூராகவும் அவர்கள் தமது மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டதோடு, ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.**

சிங்கப்பூரில் சார்ஸ் நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதைக் கொண்டாடும் வகையில் உற்சாகக் கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

உலகையே அச்சுறுத்தி வந்த சார்ஸ் நோய்க்கு இது வரை ஆயிரத்துக்கும் மேலானோர் பலியாகியுள்ளனர். பெருமளவானோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சீனாவில் தோன்றிய இந்நோய் சிங்கப்பூர் உள்ளிட்ட பலவேறு நாடுகளுக்கும் பரவியது.

இந்நிலையில் சிங்கப்பூரில் சார்ஸ் நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது. இந்த மகிழ்ச்சியை சிங்கப்பூர் மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடினர்.

சிங்கப்பூர் வர்த்தக நிலையங்கள் பலவற்றில் பல பொருட்கள் விலைக் கழிவில் விற்பனை செய்யப்பட்டன. விடுதிகளில் கூடிய மக்கள் மது அருந்தியும் இசைக்கேற்ற நடனங்கள் ஆடியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

சிங்கப்பூரில் இந்நோய் தாக்கம் இல்லையென உலக சுகாதார நிறுவனம் உறுதி செய்து விட்டாலும் புதிதாக யாருக்கும் பாதிப்பு ஏற்படுகின்றதா என்பதைக் கண்டறிந்து தாமதமாகவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


## அனல் காற்றிற்கு 829 பேர் பலி!

(புதுடில்லி)

இந்தியாவில் அனல் காற்றினால் இதுவரை 829 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஆந்திரப் பிரதேச மாநிலத்திலேயே அதிகள்விலான மக்கள் அனல் காற்றினால் உயிரிழந்துள்ளனர். இங்கு மட்டும் 795 பேர் இறந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுடில்லியில் நேற்று முன்தினம் இவ்வாண்டில் அதிகூடிய வெப்பநிலை நிலவியது. 43.8 பாகை செல்சியஸ் வெப்பநிலை இங்கு பதிவாகியது. வழமையான வெப்பநிலையிலும் விட இது 3 பாகை செல்சியஸ் அதிகமாகும்.



பாக்தாத்தின் தென் பகுதியில் அமைக்கப்பட்ட ஈராக்கிய அணுசக்தி முகவர் நிலையத்திற்கருகே குடியிருக்கும் ஹமிடா சன்மான் என்பவர் தமது 3 மாதக் குழந்தையின் உடலில் ஏற்பட்ட கொப்புளங்களைக் காட்டுகிறார்.

# சமாதான முயற்சிகளை மேம்படுத்த இராணுவ செயற்பாடுகளில் தளர்வு!

## - இஸ்ரேலிய அரசு அறிவிப்பு

(டெல்அவிவ்)

பலஸ்தீனத்துடன் முத்தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவிருக்கும் இஸ்ரேல் இராணுவக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி சமாதான முயற்சிகளை முன்னெடுக்க இருக்கின்றது.

காசா பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டு வந்த இராணுவ செயற்பாடுகள் நேற்றுக் காலையுடன் தளர்த்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இஸ்ரேல் தெரிவித்த தகவலின் படி ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் முத்தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஆர்வமூட்டுவதற்கான தமது ஆரம்ப செயற்பாடு இதுவென கூறியுள்ளது.

பொருளதார சிக்கல்களுக்கு உள்ளாகி இருக்கும் பலஸ்தீன மக்கள் தமது ஊதிய வேலைகளை ஆற்றுவதற்கு இஸ்ரேல் அனுமதி யளித்துள்ளது.

இஸ்ரேலுக்குள் இவ்வாறு நுழையும் பலஸ்தீனர்கள் அனுமதியுடன் நுழையமுடியும்.

இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீனத்தில் ஏற்கனவே நிலை கொண்ட இடங்களில் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கும்.



ஈராக்கில் சமையல் வாயு பகிர்ந்தளிக்கப்படுவதை அவதானிக்கும் அமெரிக்க படைவீரர் ஒருவர். (வரிசையில் பெண்கள்)

# உலகமயமாக்கலை எதிர்த்து பிரான்ஸில் போராட்டம்!

(பாரிஸ்)

பிரான்ஸில் நேற்று ஆரம்பமான ஜி-8 மாநாட்டிற்கு எதிராகவும் உலக மயமாக்கலுக்கு எதிராகவும் அங்குள்ள எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உலகின் பணக்கார நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, இத்தாலி உள்ளிட்ட எட்டு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் ஜி-8 மாநாடு பிரான்சின் இவான் நகரில் நேற்று ஆரம்பமானது.

இந்நிலையில் பிரிட்டனைச் சேர்ந்த தொண்டுநிறுவனம் 'ஒக்ஸ்பாம்' இம்மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் செல்வந்த நாடுகளின் தலைவர்களைப் போலவே முகமூடி அணிந்தும் எதிர்ப்புக் கோசங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறும் நகரின் முக்கிய வீதிகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இதேபோல் உலகமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரான்சிலுள்ள லீமன் ஏரிஅருகே ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ மூட்டி போராட்டம் நடத்தினர். இதனைத் தொடர்ந்து அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.




யுத்தத்தால் சோர்வடைந்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜி-8 நாடுகளின் தலைவர்களின் முகமூடிகளுடன் பிரான்ஸில் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர் (ஆபிரிக்காவில் வறுமையை நீக்கக் கோருவது அவர்களின் நோக்கமாகும்.

## - கனடாவில் மீண்டும் அச்சுறுத்தல் -

# 96 வயதுடைய நபரும் 'சார்ஸ்' நோய்க்குப் பலி!

(ஒட்டாவா)

கனடாவில் சார்ஸ் வைரஸ் நோய் அதிகரிக்கத் தொடங்கி இருக்கும் இவ்வேளையில் டொரன்டோவில் மேலும் நான்கு பேர் பலியானமை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொண்ணூற்றாறு வயதுடைய நபர் ஒருவர் சார்ஸ் நோயினால் பலியானதை அடுத்து நகரின் மருத்துவ அதிகாரிகள் விழிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

இறந்த இந்த வயோதிபரிடம் இருந்து பலருக்கு நோய்க் கிருமிகள் பரவி உள்ளதனால் சுகாதார அதிகாரிகள் உஷாரடைந்துள்ளனர்.

நோய் பரவாமல் இருக்கும் நடவடிக்கையாக சுமார் ஏழாயிரம் பேர் வரை தனிமைப் படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

# இந்தியா - பாகிஸ்தான் சமரசப் பேச்சுக்களில் காஷ்மீர் பிரதிநிதிகளும் பங்கேற்க வேண்டும்

## - வெளியுறவு அமைச்சர் வலியுறுத்து

(இஸ்லாமாபாத்)

இந்தியா - பாகிஸ்தானுக்கிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றால் அப்பேச்சு வார்த்தைகளில் காஷ்மீர் மக்களும் பங்கேற்க வேண்டும் என பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈரானில் நடைபெற்று வரும் இஸ்லாமிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படை பணிகளை விரைவில் முடித்து விட வேண்டும்.

அமைதி முயற்சியைத் தொடர்வதில் பிரதமர் வாஜ்பாய் ஆர்வமாக உள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




கல்கத்தாவில் நிலவும் கடும் வெப்பத்தைத் தணிக்கும் வகையில் கூக்லி ஆற்றில் நீராடும் இந்திய சிறுவர்கள்

## குண்டு மீட்பு!

இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் பாரமுல்லாவில் காங்கிரஸ் தலைவி திருமதி சோனியா காந்தி பேசவிருந்த பொதுக்கூட்ட மேடையருகே நேற்று குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டது. படையினர் அந்தக் குண்டைக் கைப்பற்றி செயலிழக்கச் செய்துள்ளனர்.

# விவசாய மேம்பாட்டை நோக்கி....

வன்னிப்பிரதேசம் விவசாயத்தை மூலப் பொருளாதார வளமாகக் கொண்டியங்குகிறது. எண்ணற்றுக் கிடக்கும் குளங்களும் விரிந்து கிடக்கும் விவசாய நிலங்களும் விவசாயத்துக்கான மூல காரணியாக அமைந்துவிட்டன.



## மாதிரிப் பண்ணை

வன்னிப்பிரதேசத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவகையில் அங்கு பயன்தரக்கூடிய விவசாய உற்பத்திகள் இடம்பெறுகின்றன. மண்வகை, நீர்ப்பாசன வசதி, தரை அமைப்பு என்பனவற்றுக்கேற்ப அங்கு செய்கை பண்ணக்கூடிய விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குளங்களை நம்பிய வயற்செய்கையும், கிணறுகளை



நம்பிய மேட்டுப்பயிர்ச்செய்கையும் இங்கு இடம்பெறுகின்றது. அத்துடன் நீண்ட ஆயுட்காலப் பயிர்செய்கையும் மேற்கொள்ளப் படுகின்றது.


வன்னிப்பிரதேசத்தின் பெரும்பாலான கிராமங்கள் இடப்பெயர்வுகளைச் சந்தித்து தற்போது மீண்டும் மீள் குடியேற்றம் மூலம் புத்துயிர் பெற்று வருகிறன.

அவர்களது விவசாய நிலங்களைத் தவிர யாவும் அழிவுற்ற நிலையில் மீண்டும் அவர்கள் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாய உற்பத்திக்காக உள்ளீடுகள் இக்காலப் பகுதியில் அவர்களுக்கு அவசிய தேவையாக உள்ளது. அவற்றிலும் அதிக விளைச்சலைத் தரக்கூடியதும் குறுகிய காலப்பகுதிக்குள் பயன்தரக் கூடியதுமான விவசாய விளைபொருட்களே இன்று அவர்களுக்குத் தேவை.



இவ்வாறான விளைபொருட்கள் அவர்களைச் சென்றடைவதற்கு ஏது வான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டியது அவசியமாகின்றது.



சமாதான காலமாகிய இக் காலப் பகுதியில் எமது பகுதிக்கான பொருளாதாரத் தடைகள் ஓரளவுக்கு நீக்கப்பட்டு விவசாய உற்பத்திக்கு வேண்டிய வளங்கள் கிடைக்கக் கூடிய காலமாக இக் காலப்பகுதி காணப் படுகின்றது.



புதியவகை இனங்களைத் தரு வித்து அவற் றினைப் பெருக்கம் செய்து இப்பகுதி எங்கும் துரித கதி யில் அந்த விவ சாய உள்ளீடுகள் பரப்பப்பட வேண் டிய தேவையும் உள்ளது. இதன் மூலமே அதிக விளைச்சல் தரக் கூடிய இனங்கள் பயன் பாட்டுக்கு வரவாய்ப்பு ஏற்ப டும்.

தமிழீழ பொருண்மிய மதியுரையகம் வட்டக்கச்சிப் பகுதியில் மாதிரி பண்ணை ஒன்றினைச் செயற்படுத்தி வருகின்றது. எழுபதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைத் தன்னகத்தே கொண்டு இந்தப் பண்ணை பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் காலபோகப் பகுதிக்கு மக்களுக்கு விநியோ கிக்கக் கூடிய வகையில் இங்கு உற்பத்திகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அதிக விளைச்சல் தரக்கூடிய விளைபொருட்களும் ஏற்றுமதி நோக்கம் கருதிய விளைபொருட்களும் தருவிக் கப்பட்டு இங்கு விளைபொருள் உற்பத்தி இடம் பெறுகின்றது.

புதிய, புதிய வகை இனங்கள் பயிரிடப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு அவை உரிய பருவத்தினை எட்டியதும் விநியோகத்துக்கு ஏற்றவகையில் தயார்ப்படுத் தப்படுகின்றன.

அத்துடன் கால்நடைகளும் இங்கு கலப்பினம் செய்யப்பட்டு ஆய்வுப்பணிகள் இடம்பெறுகின்றன.

புதியவகை கால்நடை இனங்கள் தருவிக்கப்பட்டு அவை இப்பிரதேச கால்நடை இனங்களுடன் கலப்பினம் செய்யப்படுகின்றன.

இங்கு விவசாயத்துக்கான நீர்ப்பாசனமானது சூரிய மின்கலத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. எமது பிரதேசத்துக்கேற்ற சிறந்த ஒரு அமைப்பாக இது காணப்படுகின்றது. எரிபொருள் செலவற்ற முறையில் சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் இதன் மூலம் நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நீர்ப்பாசன நடைமுறையானது எமது மக்களையும் சென்றடையுமானால் அவர்கள் குறிப்பிட்ட ஆரம்பச் செலவுடன் மட்டும் நீர்ப்பாசனத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**அர்ச்சனா**

இந்தப் பண்ணையானது மேலும் பல்வகையான விளைபொருட்களைத் தருவித்து உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

விவசாய பிரதேசமாகிய இப்பகுதியில் விவசாய நடவடிக்கைகள் மேலும் வலுவடைவதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் வலுச் சேர்ப்பதாக அமைகின்றன.

இப்பணி தொடர்ந்தும் இடம்பெற்று அவை மக்களைத் துரிதகதியில் சென்றடைய வேண்டும் என்பதே சகலரதும் ஆவல்.

□□□

# மிருசுவில் படுகொலையில் சடலங்கள் அனைத்தும் கழுத்து வெட்டப்பட்டிருந்தன!

## வைத்திய அதிகாரி சாட்சியம்

"தற்போது எனது வயது 69. இந்த நேரத்தில் பொய்ச் சாட்சி கூறி பெற்றுக்கொள்ள முடிவது ஒன்றுமில்லை. சடலங்களைப் பார்த்த உடனேயே அவை கழுத்தில் வெட்டப்பட்ட நிலையிலிருந்ததை இலகுவாக அவதானிக்க முடிந்தது." இவ்வாறு மிருசுவில் படுகொலை தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் சாட்சியமளித்த பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய கலாநிதி சின்னத்தம்பி கதிரவேலு தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கில் சந்தேக நபர்களான சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த சுனில் இரத்நாயக்க, சேனக முனசிங்க, சுபசிங்க, புஸ்பகுமார காமினி முனசிங்க ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த வைத்தியர் கதிரவேலு ஒரு சடலத்தை மட்டும் பரிசோதித்துவிட்டு ஏனையவற்றை அனுமானத்தின் படி கூறுவது முடியாது. எனது உதவியாளரின் உதவியுடன் அனைத்து சடலங்களும் வெட்டி பரிசோதனை செய்யப்பட்டது. ஆனால் நாங்கள் பரிசோதனை செய்யுமுன் சடலங்கள் அனைத்தும் கழுத்துப்பகுதி வெட்டப்பட்டே காணப்பட்டது எனக் கூறியுள்ளார்.

மேலும் விசாரணைகள் இன்று பி.ப.2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

# மகாபொல நிதியம் மூலம் 8200 பேருக்கு புலமைப்பரிசில்

(கொழும்பு)

மகாபொல நம்பிக்கை நிதியம் இவ்வருடம் 8200 புலமைப்பரிசில்களை மாணவ மாணவிகளுக்கு வழங்குகின்றது.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் இதற் கான மாணவர்கள் தெரிவுசெய்யப் பட்டார்கள். 7200 புலமைப்பரிசில்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மிகுதி 1000 புலமைப்பரிசில்கள் ஏனைய உயர் கல்வி நிலையங்க ளில் கல்வி கற்போருக்கும் வழங்கப்படும்.

# முன்பள்ளி சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக்கிளையால் நடத்தப்படும் மூன்று முன்பள்ளிகளில் கல்வி பயிலும் சிறார்களுக்கான சத்தூட்டல் திட்டத்தின் கீழ் கியூடெக் ஸ்தாபன அனுசரணையுடன் இலைக்கஞ்சி வழங்கும் வைபவம் கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்க தலைமையகத்தில் தலைவர் கே. கார்த்திகேசு தலைமையில் கடந்த வெள்ளியன்று சிறப்பாக நடைபெற்றது.

பெருமளவில் முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ராஜினி, கியுடெக் நிறுவனத்தைச் சேர்ந்த வணபிதா றோய் அடிகளார், கரைச்சிப் பிரதேசசெயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பொன் நித்தியானந்தன், பனை அபிவிருத்தி சபை இணைப்பாளர் ஏ.வி.கே. மாணிக்கம் ஆகியோர் உரையாற்றினார்கள். செஞ்சிலுவைச்சங்க பொருளாளர் டாக்டர்.கே.வி.கே திருலோக மூர்த்தி நன்றியுரை கூறினார். வணபிதா றோய் அடிகளார் சிறார்களுக்கு இலைக கஞ்சியை வழங்கி இலைக்கஞ்சித் திட்டத்தை அங்கு ஙார்ப்பணம் செய்துவைத்தார்.

# "நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போவதற்காய் நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்"

## - யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் பொங்கு தமிழ் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நாங்கள் எங்கள் வீடுகளுக்கு போவதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள் என்ற வேண்டுதலுடன் பொங்கு தமிழுக்கான அழைப்பினை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது.

எப்போதெல்லாம் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றனவோ, எப்போதெல்லாம் தமிழர்களின் விருப்பங்கள் ஒடுக்கப்படுகின்றனவோ எப்போதெல்லாம் தமிழர்களின் மனங்கள் மறுக்கப்படுகின்றனவோ அப்போதெல்லாம் பொங்கும் நியாயமான உணர்வுகள் ஒன்றுதிரண்டு பொங்கி எழும் புதிய உண்மைகளோடு அனைவரின் மனச்சாட்சிகளைத் தட்டித்திறக்கும்.

கடந்த பொங்கும் தமிழ்களில் மறுக்கப்பட்ட, அறியப்படாத பிரிக்கப்பட்ட தமிழர்களின் அபிலாசைகள் சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் சர்வதேச சமூகத்திற்கு நிரூபிக்கப்பட்டது.

அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியது. யுத்தம் ஓய்ந்த சமாதான வழிமுறையிலான பிரச்சினைத் தீர்வு என்ற இன்றைய யதார்த்தத்தை உருவாக்கியது. அதை எண்ணிப் பார்க்கின்றோம். மகிழ்ச்சியடைகின்றோம்.

இன்று சமாதானப் பேச்சு இடைநடுவில்நிற்கின்றது. இயல்புநிலை வடக்கிலும் கிழக்கிலும் கனவாகிப் போனதால் பேச்சுக்கள் இடைநடுவில் நிற்கின்றது.

கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்கள் எல்லாம் அகற்றப்பட்டு நிம்மதியும் மகிழ்ச்சியும் கொண்ட இயல்பான வாழ்வு நிதர்சனமாக எங்கள் வீடுகள் இன்னமும் சுற்றி அடைக்கப்பட்ட கம்பிகளின் பின்னால் இடிந்து கிடக்கின்றது.

நாம் வாழ்ந்து உலகைப் புரிந்து கொண்ட ஊர்களின் குளக்கரைகளில், மரநிழலில் எல்லாம் எமது கால்கள் பட்டு கனகாலம் கடந்து விட்டன.

அகதி முகாம்களில் முந்நூறு வீடுகளுக்கு மூன்று கக்கூசு என்று அவதிப்பட்டவாறு இப்போது போவோம், அப்போது போவோம் என்ற நம்பிக்கை எல்லாம் கரைந்து இனி எப்போதும் போகமாட்டோம் என்ற எண்ணங்கள் எழத்தொடங்கி விட்டன.

அதிகாலையில் எழுந்து முற்றத்துக்கு வந்தால் முகத்துக்கு நேரே இன்னமும் நீட்டிய துப்பாக்கி குழல்களும் கடும்பச்சை உடைகளும் நாம் களைத்துப் போனோம். இயல்பு நிலை திரும்பும் என்றிருந்து ஏமாந்து போனோம்.

மீண்டும் எமது செவிகளில் செல் சத்தங்களும், பொம்மர் இரைச்சல்களும் கேட்பது போல் இருக்கின்றன.

எமது நித்திரைகளில் கரிய இருளுக்குள் இருந்து பெண்கள் கத்துவது கனவாக வருகின்றது. என்றாலும் நாங்கள் நம்பிக்கையைப் பிடித்துக் கொண்டு முயற்சித்துப் பார்க்க நினைக்கின்றோம்.

சிலந்தியும், சிற்றெறும்பும் நாளாந்தம் பெரு முயற்சி எடுத்து தங்கள் வாழ்வை வாழ்ந்து காட்டிக் கொள்கின்றன. மரங்கொத்திகளெல்லாம் நாள் முழுவதும் முயற்சித்து தங்களுக்கான பொந்தைக் கடைந்தெடுக்கின்றன. நாங்கள் மனிதர்கள் தானே. எனவே ஒரு முறை முயற்சித்துப் பார்க்க நினைக்கின்றோம். எறிகணை வீச்சு, விமானக் குண்டு வீச்சு, இரைச்சல், பதுங்குகுழி வாழ்வு, பயமான இரவுகள், எங்கள் பெண்களின் அலறல்கள், எங்கள் சொந்தங்களின் இழப்புக்கள் இனி எதுவுமே இல்லாமல் எங்கள் பிரச்சினைகளை ஒருமுறை தீர்ப்பதற்கு முயற்சித்துப் பார்க்கின்றோம்.

நீங்களும் வருகின்றீர்களா வந்தால் எங்கள் கரங்கள் பலப்படும். நம்மால் சில மாறுதல்களைச் செய்ய முடியும் என்று நம்புகின்றோம். நாம் கேட்க நினைப்பதெல்லாம், நாம் அறிவிக்க ஆசைப்படுவதெல்லாம் ஒன்றுதான்.

நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போவதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள். மிகவும் அடிப்படையான, மிகவும் சனநாயகமான, மிகவும் நாகரிகமான ஆனால் அத்தியாவசியமான, நேர்மையான, உண்மையான இந்த அன்பான வேண்டுகோள் எமது ஆசையின் வெளிப்பாடு. ஆனால் மிகவும் உறுதியானது.

தெரிந்தோ, தெரியாமலோ, எம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே இராணுவம் இங்கே அனுப்பப்பட்டது. சமாதானத்துக்கான யுத்தம் நடந்தது. நாம் செம்மணிகளையும் இன்னும் சொல்ல முடியாத அனுபவங்களையும் அனுபவித்து முடித்து விட்டோம்.

ஆனால், இன்று தெளிவாகச் சொல்கிறோம். எங்களின் பாதுகாப்புக்கு நீங்கள் தேவையில்லை. அது சர்வ நிச்சயமாகச் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் நிரூபிக்கப்பட்டுவிட்டது. எமது பாதுகாப்புக்கு ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள்.

எனவே மிகப் பணிவுடன் கேட்கிறோம். நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போவதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள். சிறு துளிகளாக ஒன்று சேர்ந்து பெரும் வெள்ளமாக உருவெடுத்து நாம் தலை நிமிர்வோம். எம் முன் படைகள் நகரும். உயர்ந்தவர்கள் நாம். எல்லோரும் உலகத் தாய் வயிற்று மைந்தர்கள். நசிந்து இனிக்கிடக்கமாட்டோம் நாமெல்லாம். நிமிர்ந்து நிற்போம் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொங்கு தமிழுக்கான அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு பாடசாலைகள் ஒன்றிணைப்பு!

(முல்லை)

முல்லைத்தீவு சிலாவத்தை கிராமத்தில் இயங்கி வந்த இரு பாடசாலைகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. கடந்த 28ஆம் திகதி முதல் இவை, ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன.

சிலாவத்தை றோ.க. வித்தியாலயம், சிலாவத்தை இ.த.வித்தியாலயம் ஆகியன ஒன்றிணைக்கப்பட்டு சிலாவத்தை தமிழ் கலவன் வித்தியாலயம் எனப் பெயரிடப்பட்டு இயங்குகின்றது. இங்கு தரம் - 1 தொடக்கம் தரம் - 9 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (20)

## அலங்கார உற்சவம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு கந்தசுவாமி ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் சிறப்புற இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (19)

## பதிவாளர் அலுவலக செயற்பாடு இன்றும் நாளையும் நடைபெறாது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தின் செயற்பாடுகள் இன்றும் நாளையும் நடைபெறமாட்டாது.

பதிவாளர் அலுவலகத்தின் பதிவேடுகள் இருப்பு எடுப்பதனால் சான்றிதழ்கள், மற்றும் பதிவுகள் இடம்பெறமாட்டாது.

கிளிநொச்சி பதிவாளர் அலுவலகத்தில் ஆங்கில மொழி மூல விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்குரிய ஆங்கில பெயர்ப்புக்கள் உரிய அத் தாட்சிப் பத்திரங்களில் வழங்கப்படும் எனவும் மொழி பெயர்ப்புக்கான முத்திரைக் கட்டணம் ரூபா 75 செலுத்தி சுயவிலாசமிடப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைத்து தமது பதிவுகளை மேற்கொண்டு தமது பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என கிளி நொச்சி மாவட்ட பதிவாளர் அலுவலர் தெரிவித்துள்ளார்.(பா)

## பன்னங்கண்டிப் பகுதியில் முன்பள்ளி அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளி. பன்னங்கண்டி பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் முன்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 28ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் நீண்ட காலமாக முன்பள்ளி இல்லாத நிலை இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

### - முல்லைத்தீவு மாவட்டத்தில் -

## புனர்வாழ்வுக் கழக பங்களிப்புடன் 'நியாப்' திட்டப் பணிகள் துரிதம்!

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பங்களிப்புடன் முல்லை. மாவட்டத்தில் 'நியாப்' திட்டப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வருடத்துக்கான முல்லை மாவட்ட சமூகவலுவூட்டல் பணிகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்றதன் பின்னர் நியாப் திட்டப் பணிகள் வேகப்படுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முல்லை. மாவட்டத்தில் மொத்தமாக 30 குளங்கள் புனரமைப்பதற்கு இனங்காணப்பட்டுள்ளது. இவற்றில் கடந்த ஆண்டு வரை 12 குளங்களின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. எஞ்சி உள்ள 18 குளங்களையும் புனரமைப்பதற்கான பணிகள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் மேற்படி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்விளாங் குளத்தை புனரமைப்பதற்காக 50 இலட்சம் ரூபாவும் மாந்தை கிழக்குப் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள கொல்ல விளாங்குளத்தைப் புனரமைப்பதற்காக 40 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விளாங்குளத்தைப் புனரமைப்பதன் மூலம் 162 ஏக்கருக்கு மேல் நெற் செய்கை பண்ணத்தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப் அலுவலகம் மற்றும் பயிற்சி நிலையம் போன்றவற்றை அமைப்பதற்கான வேலைத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஜீவனோபாய ஆதாரத் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகளும் ஆரம்பமாகியுள்ளன.

மேற்படி புனரமைப்புத் திட்டங்கள் முல்லை மாவட்ட அரச அதிபரின் மேற்பார்வையின் கீழ் நியாப் பிரதித் திட்டப்பணிப்பாளர் எஸ். சிவகுமாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)



கொக்காவில் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த கோர வாகன விபத்தில் சேதமடைந்த கைஎஸ் வாகனத்தை நேற்று மக்கள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.(படம் : பாஸ்கரன்)

## கிளி. வலயத்தில் 35,000 மாணவர் கல்வி நிலை மிக மோசமாகப் பாதிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் உள்ள 35,000 மாணவர்களின் கல்வி நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

மேற்படி வலயத்தில் 35000 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்ற நிலையில் இக்கல்வி வலயத்திற்கு 1600 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளது. மேற்படி வலயத்தில் மொத்தமாக 782 ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர்.

இவ்வாசிரியர்களில் இவ்வருடம் 112 பேர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு செல்லவுள்ளனர். தற்போது வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகள் நியமனத்தில் 59 ஆசிரிய நியமனங்கள் மட்டும் வழங்கப் பட்டுள்ளன.

தற்போது இவ்வலயத்துள் தேவையான ஆசிரியர் தொகையில் இருந்து அரைவாசிக்கும் குறைவான ஆசிரியர்களே உள்ளனர். இவ்வாறான நிலை நீடிக்குமேயானால் இவ்வலயத்தின் கல்வி நிலை மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும்.அத்தோடு எந்தப் பாடசாலையிலும் கட்டட வசதியின்மை, தளபாட வசதியின்மை குடிநீர்ப் பிரச்சினைஇவ்வாறான பல்வேறுபட்ட பிரச்சினைகள் நிலவிவருவதையும் அவதானிக்க முடிகின்றது.(பா)

## வவுனியா கொக்குவெளி கிராமத்தில் சிங்கள மக்கள் மீள்குடியேற்றம்!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் உள்ள கொக்குவெளி என்னும் கிராமத்தில் சிங்கள மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

வவுனியா மகாறம்பைக்குளத்திற்கு வடக்கே உள்ள கொக்குவெளி என்னும் கிராமத்தில் 1985ஆம் ஆண்டிற்கு முன் 164 சிங்களக் குடும்பங்கள் குடியேறி இருந்தன. ஆனால், இனப் பிரச்சினை தொடங்கியவுடன் 1985ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இவர்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து அநுராதபுரம், மதவாச்சி, நொச்சியாகம போன்ற பகுதிகளில் வசித்து வந்தனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து இடம்பெயர்ந்தவர்களில் 106 குடும்பங்களைச் சேர்ந்த 600 சிங்கள மக்கள் இக்கிராமத்தில் மீள்குடியேறியுள்ளனர். இவர்களுக்கு அரசினால் மீள்குடியேற்ற நிதியாக 25,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (IR)

## வன்னி விளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா (06.06.2003)



அம்பாள் அடியார்களே! அம்பாளின் பொங்கல் விழா நிகழும் சுபானு வருடம் வைகாசித் திங்கள் 23ஆம் நாள் (06.06.2003) வெள்ளிக்கிழமை வழமை போல் நடைபெறும். அன்று நண்பகல் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் பூசையும் இரவு பொங்கல் விழாவும் அடியார்களுக்கு வழமை போல் அன்னதானமும் வழங்கப்படும் என்பதை அன்போடு அறியத்தருகிறோம்.

குறிப்பு : பொங்கல் தினத்தன்று வாணிபம் செய்ய விரும்புவோர் (04.06.2003) அன்று கோவில் மண்டபத்தில் வந்து தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்
*ஆலய திருப்பணி சபை,*
*வன்னிவிளாங்குளம்,*
மாங்குளம்.

(3301)

# உர உற்பத்தி நிறுவனத்திற்கு எதிராக சுற்றாடல் பாதுகாப்புக் குழு நடவடிக்கை!

(கொழும்பு)

கொறளையில் இயங்கிவரும் உர உற்பத்தி நிறுவனத்திற்கெதிராக சுற்றாடல் காப்புக்குழு ஒன்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

கழிவுப் பொருட்களிலிருந்து உரத்தை உற்பத்தி செய்துவரும் இந்த நிறுவனம் அந்தப் பிரதேசத்தில் சூழலை மாசடையச் செய்கிறது என்றும் இதன் நிர்வாகத்தை இயங்கவிடாது தடைசெய்யுமாறு நீதிமன்றத்திடம் சூழல்காப்பு அமைப்பு கோரியுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையையும் கொறளை பிரதேச சபையையும் இந்தக்குழு எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட உர உற்பத்தி நிறுவனத் திற்கெதிராக எதிர்மனுதாரரிடம் தெரிவித்த முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை என்று மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு நகரத்தில் நிழற்படப்பிரதி சேவை

முல்லைத்தீவு நகரில் கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தினால் 02.06.2003 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தரமான நிழற் படப்பிரதி செய்து கொடுக்கப்படும் என்பதனை சகல பாவனை யாளர்கட்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,
முல்லைத்தீவு.

(சி-7887)

# கேள்வி அறிவித்தல்

## முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்தோருக்கான உலருணவு நிவாரணத்திற்கு கோதுமை மாவு(பிறிமா) வழங்குவதற்கான விலை

**மேற்படி காரணத்திற்காக 2003 ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 250 மெ.தொன் கோதுமை மாவு வழங்குவதற்காக உள்ளூர்முகவர்களிடமிருந்து முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபைத் தலைவரால் கேள்வி கோரப்படுகின்றது.**

| விநியோகிக்கப்படவேண்டிய ப.நோ.கூ.சங்கம் | விநியோகிக்கப்பட வேண்டிய தொகை(கி.கிராமில்) | | |
|---|---|---|---|
| | ஜூலை | ஆகஸ்ட் | செப்ரெம்பர் |
| 01. கரைதுறைப்பற்று | 65,000 | 65,000 | 65,000 |
| 02. புதுக்குடியிருப்பு | 70,000 | 70,000 | 70,000 |
| 03. விசுவமடு | 15,000 | 15,000 | 15,000 |
| 04. முத்து ஐயன்கட்டு | 13,000 | 13,000 | 13,000 |
| 05. வவுனியா வடக்கு | 34,000 | 34,000 | 34,000 |
| 06. பனங்காமம் பற்று | 21,000 | 21,000 | 21,000 |
| 07. துணுக்காய் | 32,000 | 32,000 | 32,000 |
| | 250,000 | 250,000 | 250,000 |

**நிபந்தனைகள்:-**

1) கூறுவிலை பிறிமா பிராண்ட் கோதுமை மா 'கிறீன் பிராண்ட்', 'மில் பிராண்ட்' ஆகியவற்றிற்குத் தனித்தனியே தயாரிக்க வேண்டும்.

2) கூறுவிலைகள் ஒரு கிலோவிற்கு எவ்வளவு எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

3) 2003 ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குத் தேவையான கோதுமை மாவினை விநியோகிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். இதனைக் கூறுவிலையில் உறுதிப்படுத்த வேண்டும்.

4) எம்மால் கோரப்படும் வர்க்க கோதுமை மாவினை மட்டுமே விநியோகிக்கவேண்டும்.

5) விநியோகிக்கப்படும் மா தரமானதாகவும், மனித பாவனைக்கு உகந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

**கேள்விகள்**

1) கேள்வி கோருநர் மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப்பணமாக ரூபா 500/= மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் 2003.06.12 ஆம் திகதிக்கு முன்செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கும், சமாசங்களுக்கும் வைப்புப் பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2003.06.23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் கேள்விச் சபைத் தலைவர், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு என முகவரி இடப்பட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பிக்கப்படவேண்டும். கேள்விப்பத்திர உறையில் இடதுபக்க மூலையில் 'நிவாரணத்திற்கான மா விநியோகம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் யாவும் அன்றைய தினம் பி.ப.04.00 மணிக்குத் திறந்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அத்தருணம் கேள்வி கோருநர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

(இமெல்டா சுகுமார்)
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.

(சி-8131)

# சூழலைப் பாதுகாக்க சுயநலன் அகல வேண்டும்!

மனிதன் உயிர்வாழ்வதற்கு முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக இயற்கை சூழல் உள்ளது. இச்சூழல் மனிதன் தனது சுயநலப் போக்கிலும் இலாப நோக்கங்களுக்காகவும் சூறையாடிவருகின்றமையால் சூழல் மாசடைவதோடு பல்வேறுபட்ட அழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.



இன்று வன்னிப்பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் இராணுவ ஆக்கிரமிப்பால் சின்னாபின்னமாக்கப்பட்ட இப்பிரதேசத்தின் மக்கள் தமது வாழ்விடங்களை இழந்து மரங்களின் கீழும், வாய்க்கால் ஓரங்களிலும், வயல் வெளிகளிலும் வாழ்ந்து தற்போது மீளக்குடியேறி வருகின்ற நிலையில் இப்பகுதிகளில் இராணுவத்தினரின் நடவடிக்கையால் பெரும் சுற்றுப்புறச் சீர்கேடு ஏற்படுத்தி செல்லப்பட்டுள்ளது. அவர்களால் அமைக்கப்பட்ட காப்பரண்கள் மண் அரண்களால் குன்றும் குழியுமாக காட்சியளிக்கிறது. இப் பகுதிகளில் மழைகாலங்களில் நீர்தேங்குவதோடு பல்வேறுபட்ட நோய்களும் நோய்க்காவிகளும் உற்பத்தியாகின்றதற்கு ஏதுவாக அமைகின்றது.

இவற்றைவிட மீளக்குடியமர்ந்து வரும் மக்கள் தமது சுற்றாடலை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டிய தேவையை உணர்ந்தவர்களாக உள்ளனரா என்பதும் கேள்வியாகவேயுள்ளது.

வன்னியில் சூழல்பாதுகாப்பு கட்டாயம் பேணப்படவேண்டும் என்பதற்கு சில உதாரணங்களை எடுத்துக்காட்டாகக் கூறமுடியும். ஏ-9 வீதியின் 155ஆம் கட்டைப்பகுதியில் ஏற்கனவே நீர் தேங்கியுள்ள இடங்களில் நகர்ப்புறக் கழிவுகள் கொட்டப்படுகிறது. ஆனால் அவ்விடம் மக்கள் குடியிருப்புக்கள் உள்ள ஒரு பிரதேசமாகும். அத்தோடு கிளிநொச்சிக் குளத்தின் கீழ்ப்பகுதியில் கடந்த சில நாட்களாக குப்பை கூழங்கள் நகர்ப்புறக் கழிவுகள் இடப்பட்டு வருவதைஅவதானிக்க முடிகிறது. தற்போது அதற்குரிய சம்பந்தப்பட்ட சுற்றுச் சுழல்பாது காப்பு நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் கழிவுப் பொருட்களை இடவேண்டாம் என்று எச்சரிக்கைப் பலகை இடப்பட்ட நிலையிலும் அவ்விடத்தில் தற்போதும் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுள்ளது. இப்பகுதி வருடம் முழுவதும் நீர் தேங்கிநிற்கும் சதுப்பு நிலமாக உள்ளதோடு இப்பகுதியை அண்டிய பகுதிகளில் குடியிருப்புக்களும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் உள்ளன. அதைவிட இது ஒரு பிரதான பாதையாகவும் கொள்ளப்படுகின்றது.

வன்னிப்பகுதியில் பிரதான வீதிகள் முதல் சிறு வீதிகள் வரை முழுமண்பாதையாக உள்ள நிலையில் சாதாரணமாக ஒருவர் ஆரோக்கியமாகப் பயணம் செய்வது என்பது மிகவும் கடினமான நிலை. அதாவது இப்பாதைகளில் எந்த ஒரு வாகனம் போனாலும் பின்னால் வரும் வாகனம் தெரியாத அளவுக்கு தெருப்புளுதி கிளம்புகின்றது. இதனூடாகப் பயணம் செய்யும் போது சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் தோன்ற ஏதுவாக அமைகின்றது. புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியின் இரு மருங்கிலுமுள்ள வேலிகள் தாவரங்களின் நிறமும் வீதியின் நிறமும் ஒரே மாதிரியாகவே உள்ளது. ஆனால், அவை ஒரு உரையாடக் கூடிய பொருளாக இருந்தால் தமது நிலையைச் சொல்லிவிடும்.

வன்னியின் கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால் வயல் நிலங்களால் சூழப்பட்ட கிராமங்களே அதிகம். இவ்வாறான இடங்களில் தேவையில்லாதவகையில் நீர் தேங்குவதன் மூலம் நோய்க்கிருமிகளும், நோய்க் காவிகளும் தாக்கத்தைப் பெரிதும் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக இப்பகுதிகளில் வடிகால் அமைப்பு முறைகள் சீரழிந்து போனமையைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

சூழல் பாதுகாப்புத் தொடர்பாக உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் பங்காளி நிறுவனங்களும் உலக சூழல் தினத்தினை முன்னிட்டு மே 29 ஆம் திகதி முதல் யூன் 04 வரையும் சூழல் எழுச்சிவாரமாகவும் யூன் 05 முதல் 19 ஆம் திகதி வரையும் சூழல் பாதுகாப்பு தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளதோடு அது தொடர்பான சில வேலைத் திட்டங்களையும் செய்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இந்தக் காலப்பகுதியில் எமது சுற்றாடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். சூழலைப் பாதிக்கின்ற விடயங்களை எவ்வாறு தவிர்த்துக் கொள்வது, தடுப்பது எவ்வாறு என்பன போன்ற பயனுள்ள விடயங்களைச் சிந்திப்பவர்களாக நாம் மாறவேண்டும். எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அத்தோடு மற்றவர்களுக்கும் இதுகுறித்து எடுத்துச் சொல்ல வேண்டும்.

**சு.பாஸ்கரன்**

எமது பகுதிகளில் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கின்ற விடயங்கள் கண்டறியப்படுமிடத்து அது குறித்து எமக்கேன் தேவையில்லாத வேலை என்பதை விடுத்து அவற்றைத் தடுக்க முன் நிற்க வேண்டும். இதன் மூலம் நாம் விழிப்படைவதோடு எம்மைச் சூழ்ந்திருப்பவர்களையும் விழிப்படையச் செய்துவிடலாம்.

எமக்காக இல்லாது விடினும் எமது எதிர்கால சந்ததியினருக்காகவாவது நாம் சிந்தித்துச் செயற்படுதல் மூலம் நன்மைகளை இதனூடாகப் பெற முடியும். இப்போதே இது குறித்துச் சிந்திப்போமா? சிந்திப்பதுடன் நில்லாது செயற்படுவோமா?

---

# வடமத்திய மாகாண முதலமைச்சரை பதவி விலக்க எதிர்க்கட்சி நிர்ப்பந்தம்!

## புறக்கணிப்பின் நீதிமன்றம் செல்ல முடிவு

(கொழும்பு)

கடந்த 27 ஆம் திகதி உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கிணங்க வடமத்திய மாகாண முதலமைச்சர் தொடர்ந்தும் அப்பதவியில் இருக்க இடமளிக்க முடியாது என சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் சட்டத்தரணியுமான அபேசிங்க மாகாண ஆளுநருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது;

"வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சராக 1999 முதல் இன்று வரை பிரேம்லால் திசாநாயக்கா பதவி வகித்து வருகிறார். கடந்த மாதம் 27 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அவர் பதவி விலக வேண்டும். இது பற்றி நான் தங்களுக்கு முன்பு பலமுறை எழுத்து மூலம் கூறியிருக்கிறேன். பதவியைத் தடை செய்யுமாறு ஆளுநர் என்ற வகையில் தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்" இவ்வாறு கடிதம் தெரிவிக்கிறது.

மேலும் அவரின் பதவி சட்ட விதிகளுக்கு அமையாதது என 1999 கார்த்திகை மாதம் மாகாண சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்பு பல தடவைகள் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது.அவர் தொடர்ந்தும் பதவியிலிருப்பது நீதிமன்றத் தீர்ப்பையும் சட்டவிதிகளையும் மீறும் செயலாகும். மேலும் கடந்த 27 ஆம் திகதி நீதிமன்றத் தீர்ப்பின்படி பிரேம்லால் திசாநாயக்காவுக்கு நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனையும் அவர் புறக்கணிக்கும் பட்சத்தில் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் அபேசிங்க கூறியுள்ளார்.

---

# பொய்ச் சாட்சி கூறிய பௌத்த பிக்கு

## வழக்கு முடியும் வரை தடுத்து வைப்பு!

(கொழும்பு)

"பிறிமா சிலோன்" நிறுவன ஊழியர்களைக் கடத்திச் சென்று அடைத்து வைத்துக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது தொடர்பாக காணி அமைச்சர் கலாநிதி ராஜித சேனாநாயக்கவுட்பட்ட குழுவினருக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாட்சியமளித்த பிக்கு ஒருவர் வழக்கு விசாரணை முடியும் வரை விளக்க மறியலில் தடுத்து வைக்க கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டவர் ராஜகிரிய ஒபேசேகரபுர அமர விகார ரதனசிறி என்ற பிக்கு ஆவார். இவர் முறைப்பாட்டுக்குப் புறம்பான வகையிலும் விடயங்களை ஒன்றுக்கொன்று முரண்பாடான வகையிலும் சாட்சியமளித்த வகையில் இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

---

# முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர் பாராளுமன்றை பகிஷ்கரிக்க முயற்சி!

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு தகுந்த தீர்வு பெற்றுத் தரவில்லை என்று குற்றம் சாட்டி மு.கா. மாற்றுக் கட்சியினர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க எண்ணியுள்ளதாகத் தெரியவருகின்றது.

அரசு ஏற்படுத்தியுள்ள சமாதானப் பேச்சுக்களில் தமது தரப்பு ஏற்றுக் கொள்ளப்படாமை, முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை என்ற காரணங்களை முன்வைத்து மேற்படி பகிஷ்கரிப்பு முடிவு எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பா.உ. நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முடிவெடுக்கும் வகையில் பிரிந்து சென்றுள்ள உறுப்பினர்கள் 5 பேர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

---

# பல்கலை மாணவர்களுக்கு புதிய காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய காப்புறுதித் திட்டம் நேற்று முதல் அமுல் செய்யப்படுகின்றது.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்தக் காப்புறுதித் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது.

சகல பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களது கற்கை நெறி பூர்த்தியடையும் வரை இந்தக் காப்பீட்டினால் அனுகூலம் பெறுவார்கள்.

ஒவ்வொரு மாணவர்களுக்குமான காப்புறுதி இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவாகும்.

இலங்கையில் இத்தகைய காப்புறுதித் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும். இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றையும் அமுல செய்யத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

---

# ஐ.நா.அபிவிருத்தி நிலைய பிரதி நிர்வாக அதிகாரி வருகை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சர்வதேச அபிவிருத்தி நிலையத்தின் பிரதி நிர்வாகப் பொறுப்பாளர் பிரட்ரிக் டபிள்யூ சீ இவ்வாரம் சிறிலங்காவுக்கு வரவுள்ளார்.

இவர் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் இரண்டாவது உயரதிகாரியாவார்.

இவர் கொழும்பில் உயர் அதிகாரிகளையும் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அத்தோடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நிலைமைகளையும் பார்வையிடுவார்.

மேலும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியோடு யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களையும் சென்று பார்வையிடுவார்.

---

# குழுமாட்டுச் சந்தியில் விபத்து; மிதிவண்டியில் வந்தவர் காயம்!

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா-மன்னார் பிரதான வீதியில் நேற்று மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியொன்றுடன் மோதியதில் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்த நபர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பிரதான வீதியில் குழுமாட்டுச் சந்தி என்ற இடத்தில் நேற்றுபகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வவுனியா உக்கிளான் குளத்தைச் சேர்ந்த பூபாலபிள்ளை என்பவர் இவ்வாறு காயமடைந்த நிலையில் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(பா)

# கேள்வி அறிவித்தல்

## புழுங்கல் (சிவப்பு நாடு) அரிசி கொள்வனவு

**முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேள்விச் சபைத் தலைவரால் புழுங்கல் (சிவப்பு நாடு) அரிசி மாதம் ஒன்றிற்கு 400 மெ. தொன் இம்மாவட்டத்தில் உலருணவு விநியோகத்திற்காக கொள்வனவுசெய்து பின்வரும் ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகம் செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைக்கூறு கோரப்படுகின்றது.**

| வழங்கப்படவேண்டிய ப.நோ.கூ.சங்கம் | வழங்கப்படவேண்டிய அரிசியின் அளவு [மெ.தொன்] | | |
|---|---|---|---|
| | ஜூலை | ஆகஸ்ட் | செப்ரெம்பர் |
| 01. கரைதுறைப்பற்று | 108 | 108 | 108 |
| 02. புதுக்குடியிருப்பு | 110 | 110 | 110 |
| 03. விசுவமடு | 20 | 20 | 20 |
| 04. முத்துஐயன்கட்டு | 17 | 17 | 17 |
| 05. வவுனியா வடக்கு | 55 | 55 | 55 |
| 06. பனங்காமம்பற்று | 40 | 40 | 40 |
| 07. துணுக்காய் | 50 | 50 | 50 |
| | 400 | 400 | 400 |

### 1. தன்மை

மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/- இம்மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு அலுவலகத்தில் 2003-06-12ஆம் திகதிக்கு முன் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கும், சமாசங்களுக்கும் வைப்புப் பணத்திலிருந்து விதிவிலக்களிக் கப்படும். கேள்வியாளர்கள் 2003-06-23ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் கேள்விப்பத்திரங்கள், கேள்விச்சபைத் தலைவர், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு என முகவரியிடப்பட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பிக்கப்படவேண்டும். கடித உறையின் இடது பக்கத்தில் 'புழுங்கல் சிவப்பு நாடு அரிசிக் கொள்வனவு' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினமே பி.ப. 3.00 மணிக்குத் திறக் கப்படும். அச்சமயம் கேள்வி கோருநரோ அல்லது அவர்களது பிரதிநிதிகளோ கலந்து கொள்ளலாம்.

**02.** ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டு கேட்பாளரும் ஒரு விலைக் குறிப்பீட்டையே அனுப்பமுடியும். மேலதிக விலைக்கூறு அனுப் பினால் ஒவ்வொரு மாற்று விலைக்குறிப்பீடும் தனியான விலைக் குறிப்பீடு கடப்பாட்டுடன் அனுப்பப்படவேண்டும்.

### 03. வரையறைகள்

1. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. அரிசி நடப்பு வருட வேளாண்மையிலிருந்து எடுக்கப் பட்டதாகவும், குமையாத வர்க்கத்தைச் சேர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.
3. நன்கு தீட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. இலங்கை தரத்தின் பிரகாரம் உடைவு 15%இற்கு கூடாமல் இருத்தல் வேண்டும். (தானியங்கள் முழு அளவில் 3/4இலும் குறைவானவை உடைந்தவையாக எண்ணப்படும்)
5. ஈரலிப்பு 14%இற்கு மேற்படலாகாது.
6. சேதமடைந்ததும், நிறம் மாறியதுமான தானியங்களின் கூடுதல் அளவு 2%.
7. கலப்பு 2%இற்கு மேற்படலாகாது.
8. பிறபொருட்கள் 0.5%இற்கு மேற்படலாகாது.
9. வெள்ளை அரிசி 5% இற்கு மேற்படலாகாது.
10. ஒரு கிலோ கிராம் அரிசியில் இருக்கும் நெல் 10இற்கு மேற்படலாகாது.

### 04. விலைக்குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாடு பேணல்

கேள்வி அறிவித்தலில் குறிப்பிடும் அளவிற்கு ஒரு மெற்றிக் தொன்னுக்கு ரூபா 600/-க்கு குறையாமல் விலைக்குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாட்டைப் பேணும் வகையில் பின்தொடர வேண்டும். (இவை அரச நிறுவனங்களுக்கும் பொருந்தும்) விலைக்குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாடு இலங்கையில் இயங்கும் ஏதாவது வர்த்தக வங்கியால் வழங்கப்பெறும் உத்தரவாதமாக இருத்தல் வேண்டும். இம்மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங் களுக்கு விதிவிலக்களிக்கப்படும்.

### 05. செயல் நிறைவேற்ற ஒப்பந்தக் கட்டுப்பாடு

தெரிவு செய்யப்பெறும் ஒப்பந்தக்காரர்கள் இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியில் வழங்கப்பெறும் வங்கி உத்தர வாதம் கொண்டதாக இருக்கவேண்டும். இந்த உத்தரவாத வழங்குநருக்கு கட்டளை இடம்பெறும் அளவில், பெறுமதியில் 10%இற்குக் குறையாமல் இருக்கவேண்டும். இந்த ஒப்பந்தக் கட்டுப்பாடு பணம் வழங்கல் முடிவடைந்ததும் விடுவிக்கப்படும்.

### 06. மாதிரிக்கூறுகள்

கீழ்க்கண்ட மாதிரிக்கூறுகள் கேள்விச்சபை செயலாளரிடம் விலைக்குறிப்பீடு மூடப்படுவதற்கு குறிக்கப்பெற்ற நாளுக்கும், நேரத்திற்கும் பிந்தாமல் கையளிக்கப் பெறவேண்டும்.

அ) 04 சிறு சிப்ப( ) மாதிரிக்கூறுகள் தகுதியான துண்டில் குறிப்பிட்டு ஒவ்வொரு உரிமை வழங்குநரால் தரப்படவேண்டும். ஒவ்வொரு சிறு சிப்பமும் 250 கிராமுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

ஆ) 04 வெற்று பொலித்தீன்/சாக்கு பைகள் இதற்காகப் பயன்படுத்துவதுடன் துண்டில் பதிந்திட வேண்டும். மாதிரிக்கூறுகள் வழங்கப்பெறாத கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

**07.** கேள்விகள் பரிசீலனை செய்யும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை எக்காரணம் கொண்டும் சந்தை விலையிலும் பார்க்க அதிகமாக இருக்கமாட்டாது.

### 08. கடன் காலப்பகுதியும், கொடுப்பனவு நிபந்தனைகளும்

ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கியோர் கடன் காலப்பகுதி, வழங்கப்பெறும் நாளிலிருந்து 45 நாட்கள் அனுமதிக்கவேண்டும். வழங்கலுக்கான கொடுப்பனவு தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பெறும். தரம் தொடர்பாக 03ஆம் பந்தியில் குறிப்பிட்டதற் கிணங்க சான்றிதழின் பேரில் வழங்கப்பெறும்.

**09.** கேள்விச் சபைக்கு கேள்வி எதனையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை உண்டு. கேள்வியாளர் பொருள் தேவைப்படும் எந்த அளவுக்கட்டளைக்கு ஏற்ப தான் குறித்த விலையில் வழங்க வேண்டும்.

**(இமெல்டா சுகுமார்),**
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-8132)



## சிந்தனைக்கு

விடுதலை உணர்வே மனித ஆத்மாவின் சாரமாக - உயிர் மூச்சாக - இயங்குகின்றது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 02-06-2003

## எல்லைகளைத் தாண்ட வேண்டும்!

விடுதலைப்புலிகள் அரசாங்கம் முன்வைத்த 'உயர்மட்ட சபை' குறித்த பிரேரணையை நிராகரித்து அனுப்பிய பதில் கடிதம் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும், விடுதலைப்புலிகளுக்கு மாற்றுத் திட்டம் ஒன்று விரைவில் அரசாங்கத்தால் அனுப்பப்படும் என்றும் அரசாங்கத்தரப்பை மேற்கோள்காட்டி வெளியாகும் தகவல்கள் கூறுகின்றன.

ஒரு வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி விக்கிரமாதித்தன் கதை போன்று இருப்பினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரேரணைகள்/ஆலோசனைகள் என்பன இனப்பிரச்சினையின் தீர்வை நோக்கி முன்னேற்றம் காண்பதற்கு ஏற்றவையாகவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி விடுதலைப்புலிகளுடன் கடிதத்தொடர்பை வைத்துக் கொள்பவராக இருக்கலாம். ஆனால், இது ஒன்று மட்டும் இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு முன்னேற்றகரமானதொன்றாக இருக்கமுடியாது. உணர்வுபூர்வமாக சமாதான முயற்சியில் அக்கறை எடுக்கும் போதே அதில் முன்னேற்றம் காண முடியும்.

அதை விடுத்து அமைச்சரவையுடன் ஆலோசனை, அதிகாரிகளுடன் ஆலோசனை எனக் கூறிக் கொண்டு பின்னர் எந்தவகையிலான முன்னேற்றகரமான திட்டங்கள் ஏதுமின்றி பிரேரணைகளை முன்வைப்பதினால் எந்தவிதத்திலும் பயன் ஏற்படப்போவதில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கமானது சிறிலங்கா அரசிடமிருந்து தற்பொழுது எதைக் கோரியது. பிரிந்து செல்வதற்கான உரிமையைக் கோருகின்றதா? அன்றி தனிநாடு ஒன்றை அங்கீகரிக்கக் கோருகின்றதா? எதுவுமேயில்லை. விடுதலைப்புலிகள் கோருவதாவது, யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு புனரமைப்புப் பணியில் விடுதலைப்புலிகள் பங்கேற்க வேண்டும். அதற்கென ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவையென்பதே.

ஆகையினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது ஆராய வேண்டிய விடயமானது புலிகளின் கோரிக்கைகளை நிறைவு செய்வதற்கான வழிவகைகள் பற்றியதாகவே இருக்க முடியும். அதை விடுத்து புலிகளின் திட்டத்திற்கு மாற்றுத்திட்டம்/மாற்று ஆலோசனை என ஆராய முற்படுவதானது காலத்தை வீணடிப்பதும், நெருக்கடியை வளர்த்துச் செல்வதுமாகவே இருக்க முடியும்.

விடுதலைப்புலிகள் அமைப்பானது ஏற்கனவே சிறிலங்கா அரசின் அரசியல் யாப்பை நிராகரித்து விட்டது. இந்நிலையில் அரசியல் யாப்புச் சட்டம் இடமளிக்கமாட்டாது எனக் கூறி, அரசியல் யாப்புக்கு உட்பட்ட விதத்தில் புலிகளின் கோரிக்கைக்கு முடிவு காண விழைவதானது அர்த்தமற்றதொன்றாகும்.

ஐ.தே.முன்னணி அரசாங்கம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோ அன்றி சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்கு மாற்றீடான அதிகாரமோ எதையும் கொண்டிருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் இவற்றைக் காரணமாகக் கொண்டு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணியில் விடுதலைப்புலிகளின் பங்களிப்பைக் குறைக்கவோ, புலிகளை ஓரங்கட்ட முனைவதோ பொருத்தப்பாடான வழிமுறையாக இருக்கமாட்டாது.

விடுதலைப்புலிகள் தற்பொழுது கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பானது அரசியல் யாப்புக்கு வெளியில் அமைக்கப்படக் கூடியதொன்றே. இதில் நீதிமன்றத்தினால் கூட எதுவும் விதிக்க முடியாது எனச் சில அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும் பட்சத்திலேயே இது குறித்த உறுதியான முடிவைப் பெறலாம்.

இது ஒரு புறம் இருக்க, விடுதலைப்புலிகளுடன் நடத்தப்பட்டுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் சிறிலங்கா அரசியல் யாப்பானது மாற்றி அமைக்கப்படுவது அவசியமானதாகும். இந்நிலையில் இடைக்கால நிர்வாகம் குறித்த விடயத்தை ஓர் சவாலாக எடுத்து, சனாதிபதி சந்திரிகாவுடன் பலப் பரீட்சை ஒன்றை நடத்திப் பார்ப்பதற்கு அரசாங்கம் ஏன் தயங்க வேண்டும். அதற்குத் தயாரில்லையெனில், அடுத்த கட்டம் குறித்து ரணில் அரசாங்கத்தின் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்.

அது மாத்திரமல்ல, ரணில் அரசாங்கம் மாகாண சபைக்கான அதிகாரங்களையும், பிரதேசசபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களையும் பற்றிப் பரிசீலிப்பதும், விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு மாற்றீடான சிபார்சுகளை இச்சபைகளின் கீழ் புரிந்துரைப்பதும்அரசின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடாகும். ஆகையினால், இத்தகையதொரு நிலைப்பாட்டுடன் எத்தனை தடவைகள் ஆலோசனைகள் நடத்தினும், கடிதம் அனுப்பினும் அதனால் பயன் கிட்டுவது கடினமாகவே இருக்கும். அதாவது அரசாங்கம் முதலில் தனது எல்லைகளைத் தாண்டி வெளிவருதல் வேண்டும். பின்னர் வரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டும். சமாதன முயற்சிகள் வெற்றி பெறும் அரசாங்கம் வெற்றிபெறவும் வாய்ப்பாக இருக்கும்.

அவ்வாறு இல்லாது, அரசாங்கம் அரசியல் யாப்பிற்குள்ளேயே புலிகளின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண முற்படுவதானது கிணற்றுக்குள் முத்துக்குளிக்க முற்படுவது போன்றதே ஆகும். இதற்காக அரசாங்கம் மேற்கொள்வதாகக் காட்டிக் கொள்ளும் முயற்சிகள் உலகை ஏமாற்றும் நடவடிக்கையாகவே இருக்கும்.

# 28 பாதாள உலகக் குழுக்கள் செயற்பாடு; நான்கு மாதத்தில் 350 கொலைகள்!

## -சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் கொலை, கொள்ளை உட்பட மிக மோசமான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் 28 பாதாள உலகக் குழுக்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் முந்நூற்றைம்பது கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் எழுபது வீதமான கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொலைகளில் அதிகமானவை திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளன.

சிறிலங்காவில் இயங்கும் பல பாதாள உலகக் குழுக்கள் அரசியல்வாதிகளின் செல்வாக்குடனேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## - ஜே.வி.பி - சு.க. கூட்டின் -
# தலைவராக சந்திரிகா, பிரதித் தலைவராக அமரசிங்க செயலாளராக அநுரா நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் ஏற்படவுள்ள கூட்டமைப்பின் தலைவராக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இக் கூட்டமைப்பின் பிரதித் தலைவராக ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டமைப்பின் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்கவை நியமிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ்விரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டமைப்பு குறித்து அடுத்த கட்டப் பேச்சுக்களில் முடிவு செய்யப்படவுள்ளது.

# உணவு நச்சுத்தன்மை அடைந்ததால் ஒரே குடும்பத்தில் 13 பேர் பாதிப்பு!

(மட்டக்களப்பு)

உணவு நச்சுத்தன்மை அடைந்ததனால் ஏறாவூரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 பேர் பாதிக்கப்பட்டு நேற்று வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், பகல் உணவுக்கென்று சமைத்த இறைச்சிக்கறியின் மிகுதியை சூடாக்கி இரவு உட்கொண்டதை அடுத்து இவர்களுக்கு மயக்கம், உடற்சோர்வு, வாந்தி என்பன ஏற்பட்டுள்ளன.

இதனை அடுத்து அனைவரும் ஏறாவூர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் சிறுவர்கள் ஐந்து பேரும் அடங்குகின்றனர். ஆறுபேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

நச்சுத்தன்மையடைந்த உணவு தற்போது மருத்துவ பரிசோதனைக்காக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# மொறட்டுவ பல்கலைக்கழக மாணவருக்கு வைரஸ் காய்ச்சல்

மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர் சிலருக்கு ஒருவகை வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து கல்வி நடவடிக்கைகளை சில நாட்களுக்கு இடைநிறுத்தி வைப்பதென இப்பல்கலைக்கழகத்தின் மூதவை தீர்மானித்துள்ளது.

எனினும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை என பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாடங்களுக்கான புதிய மாணவர்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி வரும் செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.




## பிரான்ஸ் பகிரங்க டென்னிஸில் அடுத்த சுற்றுக்கு தெரிவானோர்

உலகின் முதலாவது இடத்திலுள்ள அவுஸ்திரேலியாவின் லிட்டன் ஹெவிட் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் போட்டியிலிருந்து வெளியேறினார்.

நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது சுற்றுப் போட்டியில் ஸ்பெயினைச் சேர்ந்த ரோமி ரொபர் டோ விடம் 4-6, 1-6, 6-3, 6-2, 6-3 என்ற செட்கணக்கில் ஹெவிட் தோல்வியடைந்தார்.

தற்போதைய சாம்பியனான அல்பிரட் கொஸ்ரோ ஈக்குவடோரைச் சேர்ந்த நிக்கோலஸ் லாப் பண்டியை ஐந்து செட்களில் கடுமையாகப் போராடி நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மகளிர் பிரிவில் வீனஸ் வில்லியம்ஸ், ஜெனீபர் கப்பிரியாட்டி, லின்டே டெவன்பேர்ப் மற்றும் கிம் கிலிஸ்டர்ஸ் ஆகியோர் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவில் மகேஸ்பூபதி மற்றும் பெலாரஸின் மாக்ஸ் வில்லியர் இணையும் இந்தியாவின் லியாண்டர்ஸ் பயஸ் மற்றும் செக் நாட்டின் டேவிட்ரிக்கீஸ் இணையும் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்கள்.

## மேற்கிந்தியா பயணம்

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான மூன்று ஒருநாள் போட்டிகளிலும் இரு டெஸ்ட் போட்டிகளிலும் கலந்து கொள்வதற்காக சிறிலங்கா கிரிக்கெட் அணி மேற்கிந்தியா செல்லவிருக்கின்றது. ஜூன் 7,8,11 ஆகிய திகதிகளில் ஒருநாள் போட்டிகளும் 20 முதல் 24வரை முதலாவது டெஸ்ட் போட்டியும் 27 முதல் யூலை முதலாம் திகதி வரை 2ஆவது டெஸ்ட் போட்டியும் நடைபெறவுள்ளது.

அண்மையில் சொந்த நாட்டில் விளையாடிய சிறிலங்கா அணி படுதோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## டெரன் கஃப் மீண்டும் அணியில்

சதைப்பிடிப்பு மற்றும் உடல் உபாதைகளால் பல மாதங்களாக போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பை இழந்த இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான டெரன் கஃப் மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். இவர் தென்னாபிரிக்கா, சிம்பாவே, இங்கிலாந்து ஆகிய நாடுகள் கலந்து கொள்ளும் மும்முனை ஒருநாள் தொடரிலும் பாகிஸ்தானுடன் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளார். 32 வயது சிரேஷ்ட வீரரான இவர் இன்னும் மூன்று வருடங்களில் பிறகு சர்வதேசப் போட்டிகளிலிருந்து விடைபெறவுள்ளதாகக் கூறி வருகிறார்.

# இங்கிலாந்து கிரிக்கெட் அணி சிறிலங்கா வருகை

மூன்று டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று ஒருநாள் போட்டிகளிலும் பங்குபற்றும் வகையில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி நவம்பர் மாதம் 13 ஆம் திகதி கொழும்புக்கு வரவுள்ளது.

முதலாவதாக நடைபெறவுள்ள மூன்று சர்வதேச ஒருநாள் போட்டிகளும் ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெறும். இப்போட்டிகள் பகல-இரவுப் போட்டிகளாக நடைபெறும்.

முதலாவது டெஸ்ட் போட்டி டிச. 2ம் திகதி முதல் 6ம் திகதி வரை காலியிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி டிச. 10 முதல் 14 வரை பிரேமதாச அரங்கிலும் 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எஸ்.எஸ்.சி. மைதானத்திலும் நடைபெறும்.

இங்கிலாந்து அணி இங்கு வருகை தரவுள்ளது. இது 4ஆவது தடவையாகும்.

# வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்; அரசாங்கம் பிற்போடத் தீர்மானம்!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கான உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வடக்கு-கிழக்கில் உள்ள 54 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை சிறிலங்காவின் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை ரத்துச் செய்து புதிய வேட்பு மனுக்கள் கோரப்பட வேண்டும் என்று பிரதமரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கைக்கு பிரதமர் சம்மதம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தேர்தல் அண்மித்து விட்டதினால் பாராளுமன்றத்தில் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்து பழைய வேட்பு மனுக்களை ரத்துச் செய்து புதிய வேட்பு மனுக்களைக் கோரி தேர்தலை நடத்துவதற்கு காலஅவகாசம் போதாது என்பதினால் தேர்தலைப் பிற்போட அரசு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தேர்தலைப் பிற்போட்டு விட்டு பின்னர் பாராளுமன்றத்தில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

# முன்னைய அரசுகள் தமிழருக்கிழைத்த துரோகத்தை தற்போதைய அரசும் இழைக்க முயல்கிறது

## மாதம்பாகே அகாசி தேரர் விசனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய அரசாங்கம் மீது சமாதான மன்றத்தின் தலைவர் மாதம்பாகே அகாசி தேரர் விசனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் பேரினவாத அரசாங்கங்கள் தமிழர்களுக்கு இழைத்த துரோகத்தையே தற்போதைய அரசாங்கமும் செய்ய முயல்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளமை குறித்து கருத்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதாக உறுதியளித்த அரசாங்கம் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் வாக்குறுதிகளை வழங்கி விடுதலைப் புலிகளை ஏமாற்ற முயலும் அரசாங்கம் இந்த விடயத்தில் முன்னைய அரசாங்கங்களுக்கு எந்த விதத்திலும் சளைத்ததுஅல்ல என்பதை வெளிப்படுத்தி இருப்பதாகவும் அகாசி தேரர் தெரிவித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்குநேர் மோதின

## இருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

தருமபுரம் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேர்எதிரே மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த இருவர் படுகாயம டைந்துள்ளனர்.

விசுவமடுப்பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி வந்து கொண்டிருந்த எம்.டி.90 ரக மோட்டார் சைக்கிளும் புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பொக்ஸ்சர் ரக மோட்டார் சைக்கிளுமே தருமபுரம் வீதியில் விபத்துக்குள்ளாகின. இவ்விபத்தில் பரந்தன் நோக்கி வந்து கொண்டிருந்த பிரமந்தனாறு 32ஆம் வாய்க்காலைச் சேர்ந்த இராமநாதன் - குணரத்தினம் (வயது - 43) என்பவரும் அதேஇடத்தைச் சேர்ந்த வினாசித்தம்பி மனோகரன் என்பவரும் படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள்களும் பெரும் சேதமடைந்துள்ளன. கடந்த சில நாட்களுக்கு முன்னர் இப்பகுதியில் ஏற்பட்டவிபத்தொன்றில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதும், மற்றொருவர் படுகாயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (லோ)

### ஈ.பி.ஆர்.எல்.எவ்...

தேர்தலின் போது அந்த அணி வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டவர் எனவும் இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் மட்டக்களப்பு மாநகர சபைக்கும் போட்டியிட இருந்தவர் என தெரியவந்துள்ளது.

ஏற்கனவே புளொட் மற்றும் ரெலோ, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளின் உறுப்பினராக இருந்த இவர் 1993 முதல் 1999 வரை மட்டக்களப்பு மாநகர சபையில் ரெலோ சார்பாக உறுப்பினராக அங்கம் வகித்துள்ளார்.

### இரண்டு நாட்கள்...

குழுத்தலைவர் இரா.சம்பந்தனுடனும் நேற்றுக்காலை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ரணில் விக்கிரமசிங்க கொழும்புக்கு அழைத்து இடைக்கால நிர்வாக சபை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு தொடர்பான கட்டமைப்பு குறித்த அரசாங்கத்தின் யோசனைகளை விடுதலைப் புலிகளின் பங்களிப்பு மற்றும் அதிகாரங்கள் குறித்து விளக்கியுள்ளதோடு, இவை தொடர்பாக பேச்சுக்களை நடத்த அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் மீண்டும் ஒரு கடிதத்தை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்துள்ளதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

### பெண்கள் தொடர்...

இருக்கும் பெண்களை இனங்கண்டு மனித வளங்களை இயக்க சம்பந்தப்பட்டவர்கள் உழைக்க வேண்டும் எனவும் தீமானங்களில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மூன்று நாட்களாக நடைபெற்ற இம் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் தமது கிராமங்களுக்குச் சென்று பெண்கள் கலைபண்பாட்டுக் கழகம் ஒன்றை ஆரம்பித்து அது சம்பந்தமான அறிக்கை ஒன்றை மாவட்ட பெண்கள் மேம்பாட்டு கழகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தீமானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காலை 10.50 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரை நானாட்டான் பிரதேசப் பொறுப்பாளர் ரமேஸ் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதாப் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தலைமையுரையை மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆற்றினார். அதனைத் தொடர்ந்து மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, மாகாண சுகாதாரப் பணிப்பாளர் உட்பட பலர் உரையாற்றினர். இறுதியாக கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. (மி)

### ஒருவர் காயம்...

வம் இடம் பெற்றுள்ளது.

வேலப்பா எனப்படும் 50 வயதுடைய முதியவர் வீதியோரத்தில் இருந்து தர்மம் பெற்றுக் கொண்டிருந்த வேளை இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

மேற்படி விபத்தில் சிக்கிய முதியவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள முதலாம் கட்ட மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (லோ)

### டோக்கியோ...

தெரிவித்துள்ளார்.விடுதலைப்புலிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாது விட்டாலும் திட்டமிட்ட படி இந்த மாநாடு ஜப்பானில் நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டிற்கு வாழ்த்துத் தெரிவித்து சிறிலங்கா சனாதிபதி செய்தி ஒன்றினை அனுப்பி வைக்கவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### நம்பிக்கையீனமே...

முயற்சிகள் வட அயர்லாந்தின் அனுபவங்கள் என்பன தொடர்பான கூட்டத்தின் போது அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

வட அயர்லாந்து சமாதான முயற்சிகள் நூற்றுக்கு நூறு வெற்றியளிக்காத போதிலும் ஒன்பது வருடங்களாக வட அயர்லாந்தில் இடம் பெற்று வந்த போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

உணர்ச்சி வசப்படக்கூடிய சம்பவங்கள், அசௌகரியங்கள் போன்றன இடம் பெறுகின்ற போதிலும், போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்காத போதிலும் ஒன்பது வருடங்களாக இடம்பெற்று வந்த வன்முறைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காட்டு விலங்கு காத்திடுவீர்
நாட்டுவளம் பேணிடுவீர்

# கண்ணிவெடி விழிப்புணர்வு தெருவெளி நாடகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் யுனிசெவ் நிறுவனத்தின் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினால் "ஒருகணம்" எனும் தெருவெளி நாடகம் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று முதல் மக்கள் மீள்குடியேறிவரும் கிளிநொச்சி, இரத்தினபுரம்,



உதயநகர், இரணைமடு, ஜெயந்திநகர் ஆகிய இடங்களில் மகளிர் கலைபண்பாட்டுக் கழக கலைஞர்களால் கண்ணிவெடி மற்றும் வெடிபொருட்கள் தொடர்பான விழிப்பு ணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு இந்நிகழ்வு நடை பெற்று வருகின்றது. (பா)

## - ஏ-9 போக்குவரத்தில் -

# நெரிசலைத் தவிர்க்க புதிய பாதை திறக்குக

ஏ-9 வீதித்திருத்த வேலைகள் நடைபெற்றுவரும் வேளை கிளிநொச்சி டிப்போ சந்திக்கும் கந்தசாமி கோவிலுக்குமிடையிலான போக்குவரத்தில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் கிளி. பழைய வைத்தியசாலையின் பின்புறம் வரை தண்டவாளப் பாதையில் அமைக்கப் பெற்றுள்ள புதிய வீதியை கந்தசாமி கோவில் எதிர்வரை (கணேசபுரம்) செப்பனிட்டு போக்குவரத்திற்கு வழிசமைக்க வேண்டுமென கிளிநொச்சி வாசிகள் எதிர்பார்க்கின்றனர்.

டிப்போ வீதிச்சந்திக்கும், கந்தசாமி கோவிலுக்குமிடையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. இதனால் போக்குவரத்தில் தாமதமும் அடிக்கடி வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன. கிளி.பொது விளையாட்டரங்கில் அடிக்கடி முக்கிய பிரமுகர்களின் விஜயத்திற்காக உலங்கு வானூர்தி இறங்குவதால் அப் பிரமுகர்களின் பாதுகாப்புக்கருதி போக்குவரத்தில் தற்காலிகத் தடை ஏற்படுத்தப்படுகிறது. இவ்வேளை அவசர நோயாளர்களை ஏற்றிவரும் வாகனங்களும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. பழைய வைத்தியசாலை வரை அமைக்கப் பெற்றுள்ள வீதியை கணேசபுரம் வீதிவரை நீடிப்பதன் மூலம் வீதி விபத்துக்கள் தவிர்க்கப்படும். அத்துடன் முக்கிய பிரமுகர்களின் விஜயத்தின்போது இவ்வீதியை போக்குவரத்திற்கு பயன்படுத்தலாம். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டுமென கிளி. வாசிகள் ஆதங்கப்படுகின்றனர்.

## - சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு -

# உணவு வழங்க தினமும் 3 இலட்சம் ரூபா செலவாகிறது

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு நாளாந்தம் உணவு வழங்குவதற்கு மூன்று இலட்சம் ரூபா செலவிடப்படுவதாக சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோண் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 8-10 வருடங்கள் வரையான தண்டனையை அனுபவிக்கும் கைதிகளின் எண்ணிக்கையே அதிகமாக இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சிறைச்சாலைகளில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சந்திரானந்த டீ சில்வா நியமனம்

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் படைத்துறை அமைச்சின் செயலாளரும் தேர்தல் ஆணையாளருமான சந்திரானந்த டீ சில்வாவை சனாதிபதி தனது ஆலோசகராக நியமித்துள்ளார்.இத்தகவலை சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெகுவிரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### மூன்று ஐரோப்பிய..

வுள்ளனர்.இதேவேளை, டோக்கியோவில் யூன் மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோர் மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்வது கேள்விக்குறியாகியுள்ளதொரு சந்தர்ப்பத்தில் இம் மூன்று இராஜதந்திரிகளினது விஜயமானது முக்கியத்துவம் மிக்கதொன்றாக அரசியல் வட்டாரத்தில் கருதப்படுகின்றது.

புதிய கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தமிழீழ மாணவர் அமைப்பு கணனிப் பயிற்சி நிலையத்தில் புதிய பிரிவில் கற்க விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் கணனிப் பயிற்சி நிலையத்தில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 15-06-2003
நேர்முகத் தேர்வுத் திகதி 20-06-2003.

தமிழீழ மாணவர் அமைப்பு,
முல்லை. மாவட்டம்.

(சி-7888)